# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR

| | | |
|---|---|---|
| CC | : | 559/2024 |
| Deposition of Witness for | : | PW. 4 (LW-16 ) |
| Name | : | திரு.செந்துார்பாண்டியன் |
| Father’s Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |
| Accused | : | எதிரி ஆஜர் |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1973 of that 24th day of February 2026.**

**முதல் விசாரணை**

நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி காவல்நிலைய காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகின்றேன். கடந்த 07.05.2024-ம் தேதி நான் வெங்கமேடு காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்தபோது அன்று காலை 7 மணிக்கு உதவி ஆய்வாளர் திரு.தர்மலிங்கம் என்பவர் காவல்நிலைய அலுவலலில் இருக்கும்போது கரூர் மாவடியான் கோவில் தெருவை சேர்ந்த பிரபாகரன் மனைவி பிரசுதா என்பவர்நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று நி.கு.எண்.191/2024, ச/பி.304 ஏ இ.த.ச.படி வழக்கு பதிவு செய்துள்ளார். அந்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3** ஆகும்.

பின்பு வழக்கை எனது பார்வைக்கு வைத்தார். நான் முதல் தகவல் அறிக்கையை பார்வையிட்டு வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து 07.05.2024-ம் தேதி காலை 8 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் நிமலேஷ் மற்றும் வினோத்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் தயார் செய்து சாட்சிகள் கையொப்பம் பெற்றேன். பின்பு சம்பவ இடம் குறித்து மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4** ஆகும். விபத்தில் இறந்துபோன பிரபாகரன் என்பவரின் பிரேதத்தை அன்றைய தினம் காலை 8.30 மணிக்கு கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பார்வையிட்டு பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் விசாரணை மேற்கொண்டு அறிக்கை தயார் செய்தேன். அந்த **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.5** ஆகும்.

பின்பு பட்டியல் சாட்சிகள் 1 முதல் 9 வரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். விபத்தில் ஈடுபட்ட வாகனத்தின் உரிமையாளர் பாப்பாத்தி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். விபத்தில் ஈடுபட்ட வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளரிடம் முன்னிலைப்படுத்தி மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை பெற்று அவரது வாக்குமூலம் பதிவு செய்தேன். **TN 47 BV 0384 என்ற வாகனத்தின் ஆய்வறிக்கை அ.சா.ஆ.6** ஆகும். **TN 47 P 7531 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை அ.சா.ஆ.7** ஆகும். இந்த வழக்கின் இறந்துபோன பிரபாகரன் என்பவரது பிரேதத்தை பரிசோதனை செய்த மருத்துவர் திரு.சங்கர் என்பவரையும், பிரபாகரன் என்பவர் அனுமதிக்கப்பட்டபோது அவரது இறப்பை உறுதி செய்த மருத்துவர் திரு.கோபிநாத் என்பவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். பிரபாகரன் என்பவரின் **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.8** ஆகும். எதிரியை 11.07.2024–ம் தேதி 12.30 மணிக்கு காவல்நிலையத்தில் வைத்து கைது செய்து தகுந்த ஜாமினில் விடுவித்தேன். பிரேத பரிசோதனை அலுவலல் பார்த்த தலைமை காவலர் சக்திவேல் மற்றும் முதல் தகவல் அறிக்கை தயார் செய்த உதவி ஆய்வாளர் திரு.தர்மலிங்கம் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் தயார் செய்தேன். இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து 02.08.2024–ம் தேதி இறுதி அறிக்கை தயார் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>**

காவல்நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகாரில் ஒரு திருத்தம் உள்ளது என்றால் சரிதான். அது குறித்து நான் புகார்தாரரிடம் விசாரிக்கவில்லை. சம்பவ இடத்தில் பார்வை மகஜர் தயார் செய்தபோது இரண்டு நபர்கள் மட்டும் இருந்தார்கள். பொதுவாக சம்பவ இடத்தில் பொதுமக்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கும். நான் சம்பவ இடம் சென்றபோது பொதுமக்கள் நடமாட்டம் அதிகம் இல்லை. இறந்துபோன பிரபாகரனின் வாகனத்தின் பதிவு சான்று 11.06.2021 அன்று காலாவதியாகிவிட்டது என்பதை மோட்டார் வாகன ஆய்வறிக்கை பார்த்து தெரிந்து கொண்டேன். விபத்து நடைபெற்ற பின்பு மோட்டார் வாகன ஆய்வறிக்கையை ஒரு மாதம் கழித்து வாகனங்களை முன்னிலைப்படுத்தியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கான காலதாமதம் வேலை பழு காரணமாக ஏற்பட்டது. அது குறித்து இறுதி அறிக்கையில் சொல்லவில்லை.

வழக்கில் உள்ள ஆவணங்கள் அனைத்தும் காவல்ாநிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரியை சொன்ன நேரத்தில் கைது செய்யவில்லை என்றும், சம்பவ இடம்சென்று நேரடியாக பார்வையிடவில்லை என்றும் சொன்னால்சரியல்ல. நான் விசாரித்ததாக சொல்லும் சாட்சிகள் அனைவரும் இறந்துபோன நபரின் உறவினர்கள் என்றும், வழக்கிற்கு ஏற்றாற்போல் அவர்களது வாக்குமூலங்களை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியின் அஜாகக்கிரதையால் விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

(ஓம்.என்.எஸ்.ஜெயபிரகாஷ்)
தலைமை குற்றவியல் நடுவர்,
கரூர்.